பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

19 12 2024 **THURSDAY** **12.40 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் இரண்டு மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

2. பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் காயமடைந்த விவகாரத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி மன்னிப்பு கேட்க வேண்டும் என நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு வலியுறுத்தியுள்ளார்.

3. சுகாதார சேவை மற்றும் கல்வித்துறையில் தனியார் முதலீட்டை அதிகரிக்க வேண்டும் என மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

4. ஜம்மு காஷ்மீரின் குல்காம் மாவட்டத்தில் 5 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக பாதுகாப்புப்படை தெரிவித்துள்ளது.

5. 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்றது

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<<<<>>>>>

எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் இரண்டு மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியதும், முன்னாள் மத்திய அமைச்சரும், ஈரோடு கிழக்குத்தொகுதி சட்டப்பேரவை உறுப்பினருமான ஈ வி கே எஸ் இளங்கோவன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, மத்திய அமைச்சர் திரு அமித் ஷா, அம்பேத்கரை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை தெரிவித்ததாக கூறி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக, அவைத் தலைவர் திரு ஓம். பிர்லா மக்களவை நடவடிக்கைகளை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைத்தார்.

மாநிலங்களவையிலும் இதேபிரச்சினையை எழுப்பி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால், அவை நடவடிக்கைகள் பிற்பகல் இரண்டு மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

<<<<<<<>>>>>

மத்திய அரசின் பத்திரிகை தகவல் அலுவலகம், மாநில அரசு அதிகாரிகள் மற்றும் உள்ளூர் ஊடக நிறுவனங்களுடன் இணைந்து அரசின் திட்டப்பணிகளை மக்களுக்கு கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், அரசின் சாதனைகளை நாடு தழுவிய அளவிலும், பிராந்திய அளவிலும் செயல்படும் அச்சு, மின்னணு மற்றும் டிஜிட்டல் ஊடகங்களுக்கு தெரிவிக்கும் அதிகாரப்பூர்வ அமைப்பாக பத்திரிகை தகவல் அலுவலகம் செயல்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

இதுதவிர, சிறிய நகரங்கள் மற்றும் கிராமப்புறங்களில் பணியாற்றும் செய்தியாளர்களுக்கு அரசின் திட்டங்கள் குறித்து எடுத்துரைப்பதற்காக **'Vartalap '**எனப்படும் பயிலரங்குகளையும் இந்த அலுவலகம் நடத்தி வருவதாக திரு எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

**<<<<<<<>>>>>**

நாட்டின் இணைய பாதுகாப்பை வலுப்படுத்தி, தனிநபர் தரவுகளை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு ஜிதின் பிரசாதா, இணையதள சேவைகள் வெளிப்படையானதாக, பாதுகாப்பானதாக, நம்பகமான மற்றும் பொறுப்புடையதாக செயல்படுவது உறுதி செய்யப்படும் என்று கூறியுள்ளார்.

இணைய அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்களை அரசு முழுமையாக அறிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**<<<<<<<>>>>>**

சுகாதார சேவை மற்றும் கல்வித்துறையில் தனியார் முதலீட்டை அதிகரிக்க வேண்டும் என மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

புதுதில்லியில் வருடாந்திர சுகாதார மாநாட்டில் பேசிய மத்திய சுகாதாரத்துறை செயலாளர் திருமதி **Punya Salila Srivastava**, குறைந்த செலவில் உயர்தர சிகிச்சை மற்றும் தரமான கல்வி வழங்குவதற்கு அதிக முதலீடு செய்ய வேண்டியது அவசியம் என்றார்.

புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்து, நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்த இத்துறைகளில் கூடுதல் முதலீடு தேவை என்றும் அவர் கூறினார்.

இந்தியாவை காசநோய் இல்லாத நாடாக மாற்றும் அரசின் திட்டத்திற்கு தொழில்துறையினர் தாராளமாக நன்கொடை அளிக்க வேண்டும் எனவும் திருமதி **Punya Salila Srivastava** கேட்டுக்கொண்டார்.

**<<<<<<<>>>>>**

மகா கும்பமேளாவையொட்டி, 34 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக மத்திய ரயில்வே அறிவித்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் அடுத்த மாதம் 13-ஆம் தேதிமுதல், பிப்ரவரி 26-ஆம் தேதிவரை கும்பமேளா நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் யாத்ரிகர்களின் வசதிக்காக மும்பை, புனே, நாக்பூர் உள்ளிட்ட இடங்களிலிருந்து சிறப்பு ரயில்கள் இயக்கப்படவுள்ளன.

இதற்கான முன்பதிவு நாளை முதல் தொடங்குவதாகவும், மத்திய ரயில்வே மண்டல மேலாளர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் காயமடைந்த விவகாரத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி மன்னிப்பு கேட்க வேண்டும் என நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு வலியுறுத்தியுள்ளார்.

இன்று காலை மக்களவைக்கு வந்த திரு ராகுல்காந்தி, பிரதான நுழைவாயில் படிக்கட்டுகளை கடந்து சென்றபோது, பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு பிரதாப் சிங் சாரங்கி மற்றும் திரு முகேஷ் ராஜ்புத் ஆகியோரை தள்ளிவிட்டதாக கூறப்படுகிறது.

இதில் காயமடைந்த திரு சாரங்கி சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார்.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு, திரு ராகுல்காந்தி மன்னிப்பு கேட்க வேண்டும் எனவும், இல்லாவிட்டால் அவர் மீது நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஆனால், இதனை மறுத்துள்ள எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி, தாம் அவைக்குள் நுழைய முயன்றபோதுதான் பிஜேபி உறுப்பினர்கள்தான் தம்மை தள்ளிவிட்டதாகவும் கூறியுள்ளார்.

இதுதொடர்பான காட்சிகள் கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ளது என்றும், அதனை சரிபார்த்துக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

ஒரே நாடு – ஒரே தேர்தல் முறை மக்கள் நலன் சார்ந்தது என்றும், இது பொருளாதார முன்னேற்றத்தில் கவனம் செலுத்த உதவும் என்றும் மகாராஷ்ட்ரா ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

திருப்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அடிக்கடி தேர்தல் நடத்துவது நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றார்.

தோட்டத்து வீடுகளில் வசிக்கும் கூலித் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் எனவும் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் செம்மண் நிலங்களை அதிக அளவில் கொண்ட தேரி பகுதிகளை சுற்றுலா தலமாக மாற்றும் திட்டம் மாநில அரசின் பரிசீலனையில் உள்ளதாக தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இம்மாவட்டத்தில் உள்ள முள்ளக்காடு பகுதியில் கடல்சாகச விளையாட்டு மையம் அமைப்பது குறித்து ஆய்வு செய்தபின் அவர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(வாய்ஸ் பைட் - ராஜேந்திரன் - 33 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரின் குல்காம் மாவட்டத்தில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது ஐந்து தீவிரவாதிகள் இன்று சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அப்பகுதியின் **Kader** கிராமத்தில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து நேற்றிரவு முதல் பாதுகாப்புப்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது இருதரப்பினருக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச்சண்டையில் இரண்டு ராணுவ வீரர்கள் காயமடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

<<<<<<<>>>>>

பாகிஸ்தான் அரசுக்கு சொந்தமான விண்வெளி மற்றும் பாதுகாப்பு முகமையான தேசிய வளர்ச்சி வளாகம் உள்ளிட்ட நான்கு நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளது.

இந்த நிறுவனங்கள் பாகிஸ்தானின் அணு ஆயுத ஏவுகணை திட்டத்திற்கு உதவியதாக கூறி, அமெரிக்க வெளியுறவுத்துறை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

கராச்சியில் உள்ள அக்தர் அன் சன்ஸ், **Affiliates International** மற்றும் **Rockside Enterprise** ஆகியன பிற நிறுவனங்களாகும்.

<<<<<<<>>>>>

ரஷ்ய ராணுவத்தின் லெப்டினன்ட் ஜெனரல் **Igor Kirillov** உயிரிழப்புக்கு காரணமான குண்டுவெடிப்பை நிகழ்த்திய குற்றச்சாட்டின்பேரில் உஸ்பெகிஸ்தான் நாட்டை சேர்ந்த ஒருவரை ரஷ்யா கைது செய்துள்ளது.

பெயர் குறிப்பிடப்படாத 29 வயதான அந்த நபர், யுக்ரைன் ராணுவ உளவு பிரிவின் சார்பில், வெடிகுண்டு வைத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மாஸ்கோ அருகே உள்ள **Chernoye** பகுதியில் அவர் கைது செய்யப்பட்டதாகவும், ரஷ்ய ராணுவ தளபதியை கொல்ல அவருக்கு ஒரு லட்சம் அமெரிக்கா டாலர் மற்றும் ஐரோப்பிய நாடு ஒன்றில் குடியுரிமை வழங்குவதாகவும் உறுதியளித்து இந்த சதிச்செயலில் ஈடுபடுத்தியதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

**<<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்றது.

கோலாலம்பூரில் இன்று நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து களமிறங்கிய பங்களாதேஷ், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 8 விக்கெட் இழப்பிற்கு 80 ரன் எடுத்தது.

பின்னர் 81 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்தியா, 12 புள்ளி ஒரு ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 86 ரன் எடுத்து வெற்றி இலக்கை எட்டியது.

----------------

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் டுவெண்டி - டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

மும்பையில் இப்போட்டி இரவு ஏழு மணிக்கு தொடங்குகிறது.

-----------

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் குஜராத் - உத்தரப்பிரதேச அணியையும், மும்பை – பாட்னா அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<<<<END>>>>>**